14

# கலா பரமேஸ்வரன்

அமரநிலை எய்தியமை குறித்த

# நினைவாஞ்சலி

14/11

9292
நினைவா

...ஆண்டு ஆவணித் திங்கள் 24ஆம் நாள்

09-09-1983

அமரர்

# கலா பரமேஸ்வரன் அவர்கள்



தோற்றம்: 02-08-1944 மறைவு: 24 07-1983

929.2

EVELYN RUT[illegible] INSTITUTE
274
REFERENCE
LIBRARY
JAFFNA

# திருமணப்பதிவுக்குக் கையெழுத்திட்ட கையால் நினைவாஞ்சலியுரை எழுதவா?

பேராசிரியர் சு. வித்தியானந்தன்,
(துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்)

பண்பாற் பரந்த மனப்பெட்டகமாய் நின்றொளிர்ந்த உத்தமனைத் தன் புகழ்பாடத் தன்னோடு பரமேஸ்வரன் அணைத்து விட்டார்.

சமய நெறி சற்றேனும் வழுவாது சமுக நலன் கருதிப் பல தொண்டாற்றியவர் கலா. தன் மனைவி, தன் பிள்ளை, தன் வீடென்று ஒடுங்காது, தன்னன்பால் யாவற்றையும் அரவணைத்த பண்பாளன் பரமேஸ்வரன்.

அன்னார் இன்றில்லை
நம்பவே முடியவில்லை

ஒன்பது ஆண்டுகளுக்கு முன் சரியாக 1974ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 23ஆம் திகதி கண்டிக் கச்சேரியிற் கலா பரமேஸ்வரனின் திருமணப் பதிவுக்குக் கையெழுத்திட்ட அதே கையால் நினைவாஞ்சலியுரை எழுத வேண்டியதை நினைக்க மனம் துடிக்கின்றது; கை நடுங்குகின்றது; என்ன விசித்திரமான உலகம்.

எதனைப் பற்றி எழுதுவது? தமிழ்ச் சிறப்புக்கலை மாணவனாக, தமிழ் முதுகலை மாணவனாகப் படித்த காலத்து ஏற்பட்ட நெருங்கிய தொடர்புகள், தமிழ்ப் பேராசிரியராக நியமனம் பெற்றபோது முதன் முதலாகத் திருகோணமலையில் ஒழுங்கு செய்த பாராட்டுவிழா, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தராகப் பதவி யேற்றபோது பழைய மாணவர் ஆர்வலர் சார்பாக ஏற்படுத்திய பாராட்டுவிழா – இவையெல்லாம் இன்று நெஞ்சில் நிலைத்து நிற்கின்றன. இந்த நினைவுகளின் மத்தியில் 'இன்னாதம் இவ்வுலகம்' என்ற புறப்பாட்டே நினைவில் நிழலாடுகின்றது.

பல்கலைக்கழகத்திற் படித்த காலம் முதல் கடந்த இருபது ஆண்டுகளாக கலாவின் வளர்ச்சியையும் மலர்ச்சியையும் கவனித்துக் கொண்டு வந்த எனக்கு இப்பொழுதும் இம் மரணத்திற்கு விளக்கம் கூறமுடியாமலிருக்கின்றது.

அவர் நோய்வாய்ப்பட்டு இறந்திருந்தால், இயற்கையாய் இறைவனடி சேர்ந்திருந்தால் கவலைப்படுவதற்கில்லை. ஆனல் அவர் இராணுவத்தினர் நடத்திய மிருகத்தனமான சூட்டினுல் உயிரிழந்தார்.

தமிழரின் போராட்டத்திற்கு அடிமை விடுதலைக்கு இப்படி உயிர்ப்பலி கொடுத்துத்தான் ஆக வேண்டுமென்று சமாதானம் கூறலாம். ஆனல் இது அநியாயமான உயிர்ப்பலி. போராட்டத்திலே குதித்து, நேர்நேராக நின்று போராடி உயிரிழந்திருந்தால் அவர் வீரமரணம் எய்தியதாகக் கூறலாம். ஆனல் அவர் பேடித்தனமாகக் கொல்லப்பட்டார். இத்தகைய சூழலில் எந்தவிதச் சமாதானமும் கூறி நாம் அமைவு காணமுடியாது. இது படுகொலை.

அவரின் மனை விளக்காகப் பிரகாசித்து, மனையை மாட்சிமைப் படுத்தி, அவருக்குக் கைகொடுத்துதவிய றஞ்சனு இப்போது தன்னந்தனியாகத் தவிக்கின்ருர். அவருக்கு எவ்வளவு ஆறுதல் கூறினுலும் இவ்விழப்பை ஈடு செய்ய முடியாதென்பதை நான் சொந்த அனுபவ வாயிலாக அறிவேன் அவருக்கும்,ஆதரவற்று ஏங்கி நிற்கும் அவரது பிள்ளைகளுக்கும் பரமேஸ்வரன் அருள் செய்வார்; நன்மைக்கு அழிவில்லை.

உள்ளம் நினைக்க வாழ்வோர் மிகச் சிலர்; இவ்வுண்மைக் கமைய, நேற்று வாழ்ந்தார், நெஞ்சில் நிலைத்தார், பரமேஸ்வரன் எனும் நேர்ப்பட வாழ்ந்த உத்தமர்.

அவரை மறப்பதற்கில்லை

# கலா பரமேஸ்வரனைப் பற்றிய நினைவுகள்

தேவநேசன் நேசையா
(யாழ் மாவட்டச் செயலாளரும் அரசாங்க அதிபரும்)

பொதுவாக ஏற்பட்டுள்ள இழப்புக்கள் மனத்தை வாட்டி வதைத்துக்கொண்டிருக்கும் நிலையில் திரு. கலா பரமேஸ்வரனின் இழப்பு, ஒரு பேரிழப்பாகும். குடும்ப நலனைப் பேணுவது மூலம; ஆரோக்கியமான சமூகத்தையும், வலுமிக்க எதிர்காலச் சந்ததியையும் உருவாக்குவதில் ஏறத்தாழ 30 ஆண்டுகளாக உழைத்துவரும் இலங்கைக் குடும்பத் திட்டச் சங்கத்தின் பிராந்திய முகாமையாளராகக் கருமமாற்றுகையில், அவர் பல தடவைகளில் நெருக்கமாக என்னுடன் கலந்துரையாடியிருக்கிறார் விரிவான அறிவு மூலம் சமாதானமும். முன்னேற்றமும் மிக்க ஒரு சமுதாயத்தினைக் கட்டி எழுப்புவதில் ஒரு பங்கை எடுக்கக்கூடியவராக வளர்ந்து வந்த திரு. கலா பரமேஸ்வரன் புயலில் வேரோடு அழிக்கப்பட்டது ஈடுசெய்ய முடியாத நட்டமாகும்.

அவரது இழப்பால் ஆறாத வேதனைக்குள்ளாகியிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எனது ஆறுதல் செய்தியைத் தெரிவிக்கின்ற அதே நேரத்தில் அவரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

# அஞ்சலியுரை

(கோப்பாய் பாராளுமன்றப் பிரதிநிதி ஆ. மு. ஆலாலசுந்தரம்)

அமரராகிவிட்ட திரு. சு. கலா பரமேஸ்வரன் தனது அகால மறைவினால் மறக்கமுடியாத பரமேஸ்வரனாகி விட்டார். தமிழ் மக்களின் வாழ்வில் புரையோடிய புண்ணாகிவிட்ட அடிமை வாழ்வை அகற்றும் பணிக்கு அவரும் உரமாகிவிட்டார்.

தமிழர் விடுதலை வரலாற்றில் மையிற்கல்லான ஒரு வீர சாதனையையடுத்து—அவர் அகாலமறைவுக்குட்படுத்தப் பட்டுள்ளார்.

அவரது மறைவு அவரது குடும்பத்திற்கு மட்டுமல்லாது தமிழ் உலகிற்கே பெரும் அதிர்ச்சியானதும், சகிக்க முடியாததுமாகும்.

குடும்பக்கட்டுப்பாட்டு அதிகாரியாக அவர் தனது கடமையை சரிவரச் செய்தமைபோல் – தனது திடீர் மறைவின் மூலம் – தமிழின விடுதலைக்குரிய கடமையை யும் செய்தவர்களில் ஒருவராகிவிட்டார்.

அவரது மறைவினால் துயருறும் அவரது குடும்பத் தாருக்கு எப்படி ஆறுதல் கூறுவது என்று புரியவில்லை

தோற்றமும் மறைவும் வாழ்வின் இருமுனை என்ற எண்ணப்படி – அவரது மறைவு மனித சக்திக்கு அப்பாற் பட்ட ஒரு நிகழ்வு என்றே ஏற்கவேண்டும்.

சாவு தவிர்க்கமுடியாத — சந்திக்க வேண்டிய ஒன்று. ஆனால் அமரர் சந்தித்த சாவு – இனவிடுதலை யென்னும் மரம் வளர உரமான ஒரு நிகழ்வு. அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்.

இலங்கைக் குடும்பத்திட்டச் சங்கத்தினரால் அனுப்பப்பட்ட
**இரங்கற் கடிதம்.**

**ශ්‍රී ලංකා පවුල් සංවිධාන සංගමය**
**ஸ்ரீ லங்கா குடும்பத்திட்டச் சங்கம்**
**THE FAMILY PLANNING ASSOCIATION OF SRI LANKA**

*Colombo-7.*
*19th August, 1983*

Dear Mrs. Parameshwaran,

We acknowledge your letter of 12th August and are deeply shocked to hear the sad news about Kala.

As you know, your late husband was a very popular member of our staff and his work was always considered to be of very high standard. I have known him since the time he joined this Association 5 years ago and have always found him to be an excellent officer who performed his duties with a sense of loyalty and dedication. At a moment like this, we find it extremely difficult to accept such a sad loss, specially when situations have been beyond our control where we ourselves were helpless in assisting even our dearest friends.

All members of our staff are deeply grieved about his loss and on behalf of them I wish to express our condolences to you and other members of your family. It must have been indeed a very difficult situation for you to lose both your husband and your father at the same time.

The Executive Committee of the Association at its meeting held on Monday the 15th passed a Vote of Condolence to you and members of your family.

yours sincerely,
D. Abeywickrema
*Executive Director,*
*F. P. A. S. L.*

# கலா........ காலத்தின் குரல்

அழுவதுகூட ஆபத்தாகலாம்; இந்த நிலையில் இதய ஓசையைத் தணிக்கை செய்துகொண்டு, எனது மறைந்த இளைய நண்பர் கலா பரமேஸ்வரனைப் பற்றிச் சில வரிகள் எழுதுகிறேன்.

அவரின் மறைவு இன்னொரு மரணம் அல்ல; அது நமக்குப் பெரும் அகால இழப்பாகும். பரமேஸ்வரன் எழுத்தாளர், கலைஞர், இலக்கிய ஆய்வாளர், பிரசாரகர், சமூக சேவையாளர், உயர் நிர்வாகி; அத்தனைக்கும் நாற்பது வயதை எட்டாத கலகலப்பான வயதினர்.

பரமேஸ்வரன் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் படித்த வருடங்கள், முத்தமிழைப் பொறுத்தவரை, செல்வம் கொழித்த காலம். தற்போது நமது நாட்டின் தலை சிறந்த எழுத்தாளராக, கவிஞராக, நாடகக் கலைஞராக இருப்பவர்களில் பலர் அந்தக் காலத்துப் பல்கலைக் கழக மாணவர்கள் - பேராதனையின் இலக்கிய இளங்கதிர்கள். அவர்கள் மத்தியில் பரமேஸ்வரனின் பங்கு கணிசமானது. விவாதமேடையிலே, பேச்சு அரங்கிலே, நாடக மேடையிலே அவர் தோன்றிப் புகழோடு பரிசுகளும் பெற்றார். வீரகேசரி நடாத்திய சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்றார். 'காலத்தின் குரல்கள்' அவர் தொகுத்து வெளியிட்ட நூலாகும். **1967** இல் பட்டதாரியானார்.

எனக்கு முதன் முதலாகப் பணத்தை ஒரு வங்கியில் சேமிப்பாக வைக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துக் கூறி, அதற்கான பாரங்களை நிரப்பி, கையெழுத்து வாங்கிப் போனவர் பரமேஸ்வரன். இந்த அனுபவம் பலருக்கு இருக்கும். அவர் தேசிய சேமிப்பு வங்கியில் மாவட்ட மேற்பார்வையாளராகவும் (1969 - 1972), சேமிப்புப் பிரச்சார உத்தியோகத்தராகவும் (1973 - 77) திறமையாகக் கடமையாற்றியவர்.

**1977** இல் இலங்கைக் குடுப்பத்திட்டச் சங்கம் அவரை சேமிப்பு வங்கியில் இருந்து வாரிக்கொண்டது. மக்களின் சமூக விருப்பு வெறுப்புகள், நம்பிக்கைகள், மரபுகள், கோட்பாடுகள் ஆகியவற்றைத் தெரிந்த, சமூகசேவை மனமுடைய, கலைத்திறனும் பிரச்சார வல்லமையும் உடைய ஒருவர் இத்தகைய ஒரு சங்கத்திற்கு வரப்பிரசாதம். ஆகவே கலா பரமேஸ்வரன் ஆரம்பத்திலிருந்தே அந்த ஸ்தாபனத்தின் மதிப்புக்குரிய நிர்வாகிகளில் ஒருவராகக் கணிக்கப் பெற்றார்;

தொழிற்றுறையில் வெற்றி கலா பரமேஸ்வரனுக்குக் கல்வியில் இருந்த ஆர்வத்தை மழுங்கவைக்கவில்லை. 1974 ஆம் ஆண்டில் யாழ்ப் பாணத்தில் நடந்த நான்காவது அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டில் அவர் சமர்ப்பித்த 'தமிழரின் இலக்கியத் திறனாய்வு முறை-சில அறிமுகக் குறிப்புகள்' என்ற ஆய்வுக் கட்டுரை தரமானதொன்று. 1977ஆம் ஆண்டில் அவர் பேராதனை பல்கலைக் கழகத்தின் எம். ஏ. பட்டம் பெற்றார்.

கல்வியில் திறமை, பிரச்சாரக் கலையில் புதுமை, தொழிலில் வெற்றி, வாழ்வில் மகிழ்ச்சி, சிந்தனையில் மனிதாபிமானம் கொண்ட கலா 39 ஆம் வயதில் இறந்துவிட்டாராம். ........ ..................

..............................................................................................................

..............................................................................................................

அவரது மனைவிக்கும், உற்றார் உறவினருக்கும், நண்பருக்கும், உங்களுடன் சேர்ந்து எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மருத்துவ பீடம்,
யாழ் பல்கலைக்கழகம்.
2-8-83.

— நந்தி —

இலங்கைக் குடும்பத் திட்டச் சங்கத்தினரால் அனுப்பப்பட்ட
இரங்கற் கடிதத்தின் தமிழாக்கம்

**ශ්‍රී ලංකා පවුල් සංවිධාන සංගමය**

**ஸ்ரீ லங்கா குடும்பத்திட்டச் சங்கம்**

**The Family Planning Association of Sri Lanka**

*Colombo-7.*
*19th August, 1983*

**அன்புள்ள திருமதி பரமேஸ்வரன்,**

தங்கள், ஆகஸ்ட் 12-ம் திகதியக் கடிதம் கிடைத்தது. கலா பற்றிய அத் துயரச் செய்தி கேட்டு நாம் ஆழ்ந்த அதிர்ச்சியடைந்தோம்.

காலம்சென்ற தங்கள் கணவர் எங்கள் மத்தியில் மிகுந்த பிரபலம் வாய்ந்தவராக இருந்தார் என்பதையும் அவரது பணி, எப்போதும் மிகவும் உயர்தரமானதாகவே கருதப்பட்டது என்பதையும் நீங்கள் அறிவீர்கள். இந்த நிறுவனத்தில் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் அவர் சேர்ந்ததில் இருந்தே நான் அவரை அறிவேன். விசுவாசத் தோடும் அர்ப்பண உணர்வோடும் தனது கடமைகளைப் புரியும் மிகச்சிறந்த ஒரு ஊழியராகவே நான் அவரை அறிந்திருக்கிறேன். இத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில், குறிப்பாக எங்களுடைய அன்புக்குரிய நண்பர்களுக்கே எங்களால் உதவமுடியாதபடி நிலைமைகள் எமது சக்திக்கு மீறியதாக இருக்கையில் இத்தகைய ஒரு துயரமான இழப்பை ஏற்றுக்கொள்வது எமக்கு மிகவும் சிரமமானது.

இந்த இழப்பையிட்டு எமது நிறுவன ஊழியர்கள் அனைவரும் மிகுந்த துயரம் அடைந்துள்ளனர். அவர்களின் சார்பில் உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் எனது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரே நேரத்தில், உங்கள் கணவரையும் உங்கள் தந்தையையும் இழக்க நேர்ந்தது உங்களுக்கு மிகுந்த கஷ்ட நிலையாகவே இருந்திருக்கும்.

இந்த நிறுவனத்தின் நிருவாகக் குழு, 15-ந் திகதி திங்கட்கிழமை நடந்த அதன் கூட்டத்தில் உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றியது.

ஒ. அபயவிக்ரம
நிருவாகப் பணிப்பாளர்
ஸ்ரீ லங்கா குடும்பத்திட்டச் சங்கம்

19 ஆகஸ்ட் 1983

உ

சிவமயம்

EVELYN RUTNAM INSTITUTE
274
REFERENCE
LIBRARY

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

## திருவாசகம்

அன்பினு லடியே ஞவியோ டாக்கை
யானந்த மாய்க் கசிந்துருக
என்பர மல்லா இன்னருள் தந்தாய்
யானீதற் கிலஞேர் கைம் மாறு
முன்புமாய்ப் பின்பு முழுதுமாய்ப் பரந்த
முத்தனே முடிவிலா முதலே
தென்பெருந் துறையாய் சிவ பெருமானே
சீருடைச் சிவபுரத் தரைசே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணை மாகடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கை
செற்றவர் புரங்கள் செற்ற வெஞ்சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளங்
குளிர வென்கண் குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின் கண்
மெய்யடி யார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி யீசர்க்
காட் செய்மின் குழாம் புகுந்
தண்டங் கடந்த பொருளள வில்லதோ
ரானந்த வெள்ளப் பொருள்
பண்டுமின்று மென்று முள்ள பொருளென்றே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள் சற்குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே!

## திருமந்திரம்

ஊரெலாம் கூடி ஒலிக்க அழுதிட்டு
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டு
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே.

## திருப்புராணம்

ஆதியாய் நடுவுமாகி யளவிலா வறிவுமாகி
சோதியா யுணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா யேகமாகிப் பெண்ணுமா யாணுமாகிப்
போதியா நிற்குந் தில்லைப் பொதுநடம் போற்றிபோற்றி.

திருச்சிற்றம்பலம்

உ

சிவமயம்

## கதியடைந்த திதி

ஆண்டுருதி ரோற்காரி ஆடிமதிப் பூரணையே
ஈண்டுகலை எங்கும் இனிதொளிர — ஆண்ட
பரமேஸ் வரனீசன் பாதார விந்தம்
சிரமேற் பரித்த தினம்.

## வரலாறு

திருவள ரன்புத் தமிழொடு சைவப்
பெருந்தவ வொழுக்கம் திருந்தவே நிறைந்த
ஈழ நாடதன் எழிலார் சிரமென
இலங்குயாழ்ப் பாணத் தீடிலா நற்பதி
புத்தூ ரதனிற் பொருந்துயர் வேளிர்
தொல்குடித் தோன்றல் சுப்பிர மணியம்
அம்பல வாணர்தம் அரும்பெறற் செல்வி
துய்யநற் குணத்தினள் தெய்வானைப் பிள்ளைபால்
ஈன்றருள் புதல்வன்; ஏன்றதோர் நற்கலா
பரமேஸ் வரனவன் திரமார் செஞ்சொலன்;
பொறைமுதல் நாற்குணம் பொருந்திய சீலத்(து)
உரமா ரன்பினன்; உத்தமன்; உயர்ந்தோன்;
அல்லலில் தில்லை அம்பல வாணர்மற்
றுவந்திடு நல்வினைச் சிவலோக நாதன்
நலஞ்சா ரன்பன் நாராயண மூர்த்தி
என்றிவர் மூவரும் ஏதமில் சகோதர(ர்)
ஆகப் பெற்ற அருந்தவச் செம்மல்;
இலங்கைப் பல்கலைக் கழகத் திணையிலாக்
கல்வியிற் சிறந்தே கலைமுது மாணியாய்,
தேசிய சேமிப்புத் தேடுமோ ரியக்கம்
மன்னுமா வட்ட மேற்பார்வை யாளனாய்,
பிரசா ரகனாய்ப் பின்னுங் குடும்பத்
திட்டநல் லமைப்புத் திறல்வினை யாளனாய்,

பன்னுமச் சபைக்கோர் பான்மையி னமைந்த
முகாமை யாளனுய் முயன்றுமுன் னேறி,
அன்பரும் அறிஞரும் அயலும் சுற்றமும்
போற்றிட விளங்கிய புண்ணியன்; புநிதன்;
மருவின ரகலா மாண்புளா ருறையும்
திருநெல் வேலி திகழ்புலக் குரவன்
சரவண முத்தெனுஞ் சான்றோன் பயந்த
நீடருங் கற்பினள் ரஞ்சனு தேவிபால்
நிகழ்ந்தநற் காதல் நிறைவுறத் திருமணஞ்
செய்தவன்; அவள்பாற் செழுமதி யனையசீர்
அங்கயற் செல்வி, அருந்திரு நிவேதிதா
என்றிரு மக்கள் என்றிவ ணுதித்திடத்
தவமிக வியற்றியோன்; தாவி லன்புடன்
தென்புலத் தார்முதல் ஐம்புலத் தாரெலாம்
ஓம்பியோர் இல்லறத் தொழுகிடுங் காலை,
இவ்வுல கத்தில் இருவினைப் பேறெலாம்
அநுபவித் தொழியும் அகவைவந் தணுகலும்
பாரமார் உலகப் பற்றெலாம் இரிய,
வாரமார் மாதுலன் வழித்துணை வரப்போய்
மின்னெறி சடாமுடி மேலவ னடிக்கீழ்
மன்னிய வின்பெலாம் மாந்தி யிருந்தனன்
தனிப்பெருஞ் சாந்தி தழைத்திட மகிழ்ந்தே.

## தேற்றம்

பரமேஸ் வரன்றன் பரமா னந்தமாம்
பெரும்பே றதனைப் பெற்றன னுதலின்
அருந்தம ரன்பர் அயலார் அனைவரும்
இருந்துயர் நீங்குக; பொருந்துக சாந்தியே.

# கலா பரமேஸ்வரன்: காலத்தின் குரல்

— செங்கை ஆழியான் —

காலம் இரக்கமற்றது என்பது மீண்டும் நிரூபணமாகியது! எனினும், நண்பர் கலா. பரமேஸ்வரன் என்றும் காலத்தின் குரலாகவே வாழ்ந்தார். எனக்கு நன்கு நினைவிருக்கிறது. 1960ஆம் ஆண்டு; அப்போது நண்பர் கலா. பரமேஸ்வரனுக்கு வயது 16. யாழ். இளம் எழுத்தாளர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில் முதன் முதல் அவரைச் சந்தித்தேன். அச்சங்கத்தின் பிதாமகர் அவரே! இளம் எழுத்தாளர்களை ஒன்றிணைத்து ஒரு சங்கத்தை உருவாக்கிய பெருமை, காலத்தின் தேவையையுணர்ந்த பரமேஸ்வரனின் குரலே. அன்று உருவாக்கிய யாழ். இளம் எழுத்தாளர் சங்கத்தின் அங்கத்தவர்களே, இன்று ஈழத்து இலக்கியத்தின் தனித்துவப் போக்கினை நிர்ணயித்திருக்கிறார்கள், என்ற மெய்மையின் முழுப்பெருமையும் கலா பரமேஸ்வரனையே சேரும்.

இலக்கியமே, நண்பர் பரமேஸ்வரனின் மூச்சாக இருந்தது என நான் அன்று நினைத்தேன்! அதோடு 'தமிழும்' அவர் உயிர் மூச்சாக இருந்ததை 1961ஆம் ஆண்டு நானுணர நேர்ந்தது; அப்போது நான் பல்கலைக்கழக மாணவன்; நண்பர் கலா பரமேஸ்வரன் பல்கலைக்கழகப் புகுமுக வகுப்பு மாணவனாக இருந்தார். 1961ஆம் ஆண்டு, ஈழத் தமிழுலகம் சிங்களம் மட்டும் மொழிச்சட்டத்திற்கு எதிராக சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தது. யாழ்ப்பாணம் கச்சேரிக்கு முன் தமிழர்கள் தமது பேதங்களை மறந்து சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தினர். அதற்கு ஆதரவாக பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ் மாணவர்கள் மாபெரும் ஊர்வலம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் நடாத்தினர்; பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமையில் அத்தகு ஊர்வலம் ஒன்றை ஒழுங்குபடுத்தும் பணி எனக்கும் நண்பர் க. நவசோதிக்கும் வாய்த்தது. சுலோக அட்டைகளை நாங்கள் தயாரித்தோம். அதில் பல சுலோக அட்டைகளை என்னுடன் தயாரித்து வழங்கியவர் நண்பர் கலா பரமேஸ்வரன்! ஊர்வலத்தில் எங்களுடன், பல நண்பர்களுடன் கலந்து, சத்தியாக்கிரகத்தில் பங்குகொண்ட தமிழ் நெஞ்சம் அவருடையது!

1963ஆம் ஆண்டு நண்பர் கலா பரமேஸ்வரன் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகி வந்தார். அவர் வந்த காலகட்டம், ஈழத்து இலக்கியத்தை மண்வாசனையோடு ஆக்கி, நிலைபெற வைக்கும் உயர் எண்ணத்தோடு பல்கலைக்கழக எழுத்தாளர்கள் முழுமூச்சாக ஈடுபட்

டிருந்த காலம்! அன்று அது தான் எங்கள் போராட்டமாகவிருந்தது; செம்பியன் செல்வன், செ. கதிர்காமநாதன், அங்கையன், செ. யோகநாதன், செங்கை ஆழியான், துருவன், எம். ஏ. எம். சுக்ரி, குந்தவை, யோகேஸ்வரி, சண்முகநாஸ், மௌனகுரு, இ. சிவானந்தன் முத்து சிவஞானம், வேல்முருகு, கா. சிவபாலபிள்ளை, செல்வ. பத்மநாதன், க. நவசோதி முதலான இலக்கிய குழுவின் ஒரு அங்கமாக கலா பரமேஸ்வரன் திகழ்ந்தார். தக்கபல சிறுகதைகளையும், ஆய்வுக்கட்டுரைகளையும் ஆக்கித் தமிழை அழகுபடுத்தினர். பல்கலை வெளியீட்டின் மூன்றாவது சிறுகதைத் தொகுதியான 'காலத்தின் குரல்கள்' நூலின் தொகுப்பாசிரியராக பரமேஸ்வரன் இருந்தார்! தமிழ்ச்சங்க இதழான 'இளங்கதிரின்' ஆசிரியராக விளங்கினர். 1967 இல் தமிழில் சிறப்புப்பட்டமும் பெற்றார். திறன் ஓயவில்லை; 1974 ஆம் ஆண்டு எம். ஏ. பட்டமும் அவருக்குக் கிடைத்தது.

பதவிகளால் பலருக்குப் பெருமை: சிலரால் பதவிகளுக்குப் பெருமை. நண்பர் கலா பரமேஸ்வரனால் பதவிகள் பல பெருமை பெற்றன. கலா பரமேஸ்வரனின் ஆளுமை, திறன், செயற்பாடு என்பன அவர் வகித்த பதவிகளுக்குப் பெருமை தந்தன. 1969-1972 காலகட்டத்தில் தேசிய சேமிப்பு வங்கியில் மாவட்ட மேற்பார்வையாளராகக் கடமைபுரிந்தார். 1973-1977 காலகட்டத்தில் தேசிய சேமிப்பு வங்கியின் பிரச்சார உத்தியோகத்தராகவும், 1977 - 1981 காலகட்டத்தில் குடும்பத்திட்டமிடல் பிரிவில் நிகழ்ச்சித்திட்டமிடல் முகாமையாளராகவும் கடமை புரிந்தார்; 1982 யனவரியில், இலங்கைக் குடும்பத்திட்டமிடல் பிரிவின் செயலாற்று முகாமையாளராகப் பதவியுயர்வு பெற்றார்! பதவிகளை நண்பர் கலா பரமேஸ்வரன் தேடிச் செல்லவில்லை; பதவிகள் அவரைத் தேடி வந்தன.

நல்லதொரு எழுத்தாளனாக, தக்க ஆய்வாளனாக, சிறந்தவொரு பேச்சாளனாக, நாடக நடிகனாக, வானொலிக் கலைஞனாக நண்பர் பரமேஸ்வரன் வாழ்ந்தார்; பல்துறைக் கலைகளும் கைவந்த திறன், 'கலா பரமேஸ்வரன்' என்ற பட்டத்தை வழங்கியது;

பழகுவதற்கு இனிய அற்புத நண்பனை இழந்துவிட்டோம்;
தமிழுலகம் ஒரு கலைஞனை இழந்துவிட்டது!

நண்பனே, உன் நினைவுகள் காலத்தால் அழிக்கமுடியாதவை;

# உன் உயிரின் விலை!

இணுவையூர்ப் பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம்

இன்றை இலங்கை எழுத்தாளர் தலைமுறையின்
வென்றி மிகுந்த விளைநிலமாய் நின்றவனே!
இளம்எழுத் தாளர் இன்சங்கம் என்றதொரு
களமமைத்து நாடே கண்டறியா எழுத்தாளர்
மாநாடு கூட்டி மண்டபங்கள் நிரம்பிடவே
தேனூ றெழுத்துச் சிந்தனைகள் வளர்த்தோனே!
பேச்சால் எழுத்தால் பேராற்றல் மிகுசெயலால்
மூச்சாய் உழைத்து முத்தமிழ்க்கு மொய்ம்பீந்தாய்!
கலைப்பட்டக் கல்வி காரியத்தில் வீரம்
அலுப்பில்லா ஊக்கம் அளித்த பெரும்பதவி
குடும்பநலத் திட்டம் கூட்டும் அதிகாரி
இடும்பைதவிர் சேவை இனித்திலதோ இலங்கைக்கு?
என்நண்பன் நீயும் இனியசர வணமுத்து
என்ஞசான் உன்றன் எழில்மாமன் தாமும்அக்
கொலைவெறியர் குண்டுக் கிரையானீர் எனக்கேட்டு
நிலமெறிந்த மீனாய் நெஞ்சம் பதைத்தழுதேன்
உன்னை நினைக்க உன்பணிகள் தமைஎண்ண
என்ன விரைவாய் இடிவீழ்ந்து விட்டதடா!
எழுத்தாளன் என்னும் இப்புகழும் போதாது
எழுச்சி மிகுதமிழன் எதிர்கால வரலாற்றில்
தியாகிகளின் கூட்டம் சேர்புகழும் வேண்டுமெனும்
நியாயம் இருத்தல் நெஞ்சாரக் கண்டதனால்
அன்னைத் தமிழாள் அமரத்துவம் ஈந்தாள்
என்னைத் தேற்றி எழுங்கண்ணீர் துடைக்கின்றேன்
பரமேஸ் வராவில் பயின்றவொரு மாணவியாம்
ஒருநல்ல தங்கை உன்தாலி ஒளிபெற்றாள்
பரமேஸ் வராஇன்று பாரறிய ஓங்கியது
பரமேஸ் வரா! நீயும் பாரறிய ஓங்கிட்டாய்
பரமேஸ் வரப்பெயர்க்கே படைப்புண்ட உன்மனையாள்
பரமேஸ் வரனுன்னால் பாரறியும் புகழ்பெற்றாள்
தமிழ்சைவக் கல்விக்கு தந்துபள்ளி பணிசெய்த
கமழ்கீர்த்தி நன்மழவ ராயர் கவின்குடியாம்
புனிதப் பொழிலில் பூத்த நறுமலரே!
நினையுந் தோறும் நெஞ்சுருக்கும் நின்னுயிரின்
விலையை இன்று விளங்காத வெறியர்கள்
சிலையாய் நிற்கும் திருநாளில் அறிவரெனத்
தேறி அமைந்தேன் சேரும் உறவோரும்
ஆற அருள் செய்க அரன்!

# ஒரு வெண்புருவின் மரணம்

'செம்பியன்செல்வன்'

நட்பின் இதயமே கலா,

நீ மரணித்த செய்தி இதயமலர் அரும்பினை நடுக்குறவைத்து, உறையச் செய்தது. மலரின் மகரந்தப் பொடியென நீ நினைவில் மணம் பரப்புகிறாய்.

உன்னைப்பற்றிய நினைவுகள் பற்பல வண்ணங்களில், மடல்களாக விரிகின்றன:

இலக்கிய எழுத்தாளனாக... இலக்கிய இயக்கத் தோழனாக... விமர்சகனாக... பேச்சாளனாக... ஆய்வாளனாக... அந்தரங்க ஆலோசகனாக .. உன்னதமான குடும்பத் தலைவனாக... உயர்தர உத்தியோகத்தவனாக... நட்பின் இலக்கணமாக...

ஒவ்வொரு நிலையிலும் நீ உனது அற்புதமான முத்திரையை பொறித்துவிட்டே சென்றிருக்கிறாய்.

எதை எடுப்பது? எதைத் தொடுப்பது?

நிஜத்தின் உருவாய் நட்புக்கு உருக்கொடுத்த நீ-

நினைவின் நிழலால் விழிநீராடிச் சென்றதென்ன?

விழிக்குளத்தை விட்டு நினைவின் உருவெளியேறாத் தாகமென்ன?

உன் மரணத்தின் சோக ராகங்கள், ஜீவ நாதமாகி உன்னைத் திரும்பக் கொண்டு வருமென்றெண்ணியா கண்ணீரை நிலப்பாடையாய்ப் பரப்பி அஞ்சலியென உன் வரவுக்கு வாழ்த்துக் கூறி விம்மலெடுக்கும் நெஞ்சுடனும், வெப்பப் பெருமூச்சுடனும் காத்திருக்கிறோம்?

இல்லவே யில்லை.

நீ எங்களுக்காக விட்டுச் சென்ற செய்தியை விமர்சிக்கவே கூடியிருக்கிறோம்.

செய்தி—?

அது உன் மரணம்

நட்பின் உரைகல்லே!

உன் மரணம் உன் நண்பர்கள் மனதை விட்டு மறைவதேயில்லை;

அது அழியாத கருங்கற் சாசனமே:

ஆமாம்

அப்பாவியர்ன பொதுமக்களை அஞ்சி நடுங்க வைத்து, வதைத்து அழித்து அவர்களை அமரர்களாக்கிவிடும் பொழுது கருங்கற்களே தமது சாசன வாசகத்தைப் பொறித்துக்கொள்கின்றன.

ஆட்சித் திமிரும் அடக்குமுறைகளும் மனிதவுரிமைகளைப் பறித் தெடுக்கும் போதெல்லாம் எதிர்த்தெழும் ஆவேசங்கொண்ட, சுதந் திர தாகமிக்க மக்களின் உலகளாவிய கோஷங்களும், வெற்றி முழக் கங்களும் உன் நினைவினைப் புதுப்பித்துக்கொண்டே இருக்கும்!

என் இனிய இலக்கிய உறவே,

எழுபதாம் ஆண்டின் ஆரம்பத்தில், திருகோணமலையில் - உப அரசாங்க அதிபர் திரு. செ. சிவஞானம், டாக்டர் க. சு. சித்திர வேல், திருமதி ஆர் பிறைசூடி ஆகியோரை பெருந்தலைவர்களாகவும், இணைச்செயலாளரில் ஒருவராக நீரும் தலைவராக நானுமாக கொண் டெழுந்த திருகோணமலை - கலை இலக்கிய வட்டம், எத்தகைய சமு தாய விழிப்பினையும் இலக்கிய உந்துதலையும் ஏற்படுத்தின என்ப தனை எண்ணும்பொழுது மனதில் பெருமிதமே எழுகிறது அது எழுப் பிய தாக்கமே இன்றைய இலக்கிய, திருகோணமலை முன்னோடிகள், இலக்கிய வட்டங்களின் வளர்ச்சியாகும்.

இன்றைய யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்கள் அப்போது பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியராக நியமனம் பெற்றபோது திரு கோணமலை நகரே வியப்புறும் வண்ணம் அவரை அங்கு அழைத்து கௌரவித்ததில் உன் பணியின் பங்கு மிகப் பெரிதே.

தமிழை, தமிழறிஞர்களை நேசித்தவன் நீ!

இலக்கிய ரசிகனே,

கிரௌஞ்சப் பறவையின் இணைக் கூட்டு வாழ்க்கை வேட்டுவனின் வாளிக்கு இரையாகியதை நீர் மல்கும் கண்களுடன், உள்ளம் உருக கரைந்தும்போய் நீ பேசியதை கேட்டு ரசித்தவன் நான்.

இன்று யார் வைத்த வேட்டு உன்னைத் துளைவிட்டுப் பிரித்தது:

நீ போகும்போது, இங்கு ஏன் ஒரு சக்கர வாகத்தை விட்டுச் சென்றாய்?

பச்சைப் பசுங்கிளிகள் சொல் இழந்து, அழுகை மொழி கொண் டிருக்க, தாய்க்கிளியோ ஊமையெனப் பார்த்திருக்க, உலகம் வெறுமை கொள்ளும்!

பூ வெல்லாம் மண்ணில் பலகோடி பூத்திருக்க
பூவுலகம் என்றே வாழ்ந்தார்கள் கூற
பூவையிவள் சூடுதற்குப் பூவொன்று கிட்டாமல்
வேட்டு வைத்துச் சென்றுரே அரக்க மனம் படைத்தோர்
சின்னஞ்சிறு மதலை... சிங்காரச் சிரிழையாள்
செய்து விட்ட குற்றமென்ன? செய்யாத நன்மையென்ன
யாழ்ப்பாண மண்ணின் தவப்புதல்வன்
ஆண்மகனை துணையாகக் கொண்டதுவா?

**ஆய்வுநெறிகளிலே ஆர்வம் மிகக் கொண்டவனே!**

இலக்கியத்தினூடே சமுதாய ஆய்வு நடத்திடவேண்டும் என்ற நெறிதனினுல் இலக்கியமாகிப் போனுயா?

83 ஜுலை 22 வெள்ளிக்கிழமை பதினொரு மணி. உனக்கு ஞாபகம் இருக்கிறதா?

திருநெல்வேலி சந்தியில் இலக்கியமும் ஆய்வுமாக சரியாக ஒன்றரை மணித்தியாலங்கள் செலவிட்டோமே. பிரியும்போது நீ சொன்ன வார்த்தைகள் எனக்கு அப்போது அர்த்தம்புரியாமல் போய்விட்டதே.


''மச்சான்! கனக்கப் பேசவேண்டும். வீட்ட ஒருநாளும் வாருயில்லை; வாவன். வாறதெண்டால் ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னல் வா! நான் ஞாயிறு போய்விடுவேன்''

நீ வாய் தவறி கொழும்புக்கு போய்விடுவேன் என்பதனைக் கூறுகிருய் என்று எண்ணிப் பிரிந்த இடைத்தூரம் இவ்வளவு நெருங்க முடியாத தூரமாக மாறிவிடும் என எண்ணவேயில்லை.

வேட்டுவனின் கணைக்குக் குறியான வெண்புருவின் நிலைகண்டு தன்னுயிரை ஈயத் தவித்த தனியரசன் வாழ்வை இலக்கியமாய்ப் பார்த்து மயங்கியதால், தன்னரசு காக்க மாடப்புருக்களையும் மாடவிதானங்களையும் தவிடுபொடியாக்கும் தரம்கெட்ட மாக்கள் செயலறவே மறந்திரே!

செய்திகொண்டேகிய வெண்புருவே! எங்கள் நிலையை அங்கெல்லாம் உன்றன் மொழிப்புலமையால் ஆய்வு நெறிகளினுல், வெண்கலப் பேச்சினுல் எடுத்தியம்புவாய் என ஆறுதல் கொண்டமைகிரும்.

# திரு. பரமேஸ்வரன் அவர்களின் வம்சாவழி



## எமது நன்றிகள்

எனது கணவரினதும், தந்தையினதும் மரணச் சடங்குகளிலும், அந்தியேட்டி, வீட்டுக் கிருத்திய நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும், வேறு பல வழிகளில் உதவிகளைச் செய்தும் எமது துக்கத்தில் பங்கு கொண்ட அனைவருக்கும், உற்றூர் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

இங்ஙனம்
திருமதி இரஞ்சனு கலா பரமேஸ்வரன்
அவர்களும், அவரது குடும்பத்தினரும்.

EV-LYN RUTNAM INSTITUTE
274
REFERENCE
LIBRARY
JAFFNA

ஸ்ரீ லங்கா அச்சகம், யாழ்; போன்: 24175-24211

T. K. Rajasekaran
K.K.S. Road
Tellippalai